தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M.A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ புரட்டாசிமீ 29உ (15-10-'22.) | ப. 24.

விஷய அடக்கம்.

1. வர்த்தமானம் 237
2. சாரதா ஸல்லாபம் 238
3. இமையவர் இடுக்கண் 239
4. தினசரி 16 லக்ஷம் ரூபாய் 241
5. பாபு மோதி லால் கோஷ் ... . ,,
6. கைத்தொழில் அபிவிருத்தி 242
7. கனவோ, நினைவோ 243
8. புயற்காற்று 244

வர்த்தமானம்

கெமால் பாதுஷா அவர்களுடைய குணாதிசயங்களைப்பற்றி ஜெனரல் டௌன்ஷெண்ட் அவர்களுடைய அபிப்பிராயத்தின் ஸாராம்சம்:

ஊடுருவிப்பாயும் நீலோற்பலக் கண்களும், அழகிய மயிர்ச்சுருளுமுடையவர்; நடுத்தர உயரமுடையவர்; தலையில் 'கால்பாக்' தலைப்பாகை தரித்திருக்கிறார். ஸைந்ய முழுவதும் அவரிடம் அதிக பிரேமை வைத்திருக்கிறார்கள். ஊரெங்கும் அவரையே தலைவராகக்கொண்டு அவர் கக்ஷியைப் பின்பற்றியிருக்கின்றனர். அவர் இட்டது சட்டம். வெளிக்கு தாக்ஷிண்யமுடையவர்போல் காணப்பட்டாலும் ஸமயத்தில் அஞ்சாநெஞ்சம் படைத்தவர். அவர் தமக்கு சம்பந்தமான விஷயங்களைத் தவிர்த்து இதர விஷயங்களைக்குறித்து அதிகமாய்ப் பேசுவதில்லை. அவர் ராணுவ சாஸ்திரத்தில் கைதேர்ந்தவர். அணிவகுத்து எதிரியைத்தாக்குமுறையில் இணையற்றவர். 1805ம் ஆண்டில் நேபோலியன் நடத்திய 'ஆஸ்டர்லிட்ஸ்' போரின் தகவல்களைப்பற்றி வெகுநேரம் வரை இருவரும் தர்க்கித்தனராம்.

ராணுவ வித்தையிலேயே யன்றி ஐரோப்பிய ராஜாங்க விஷயங்களை அவர் ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்திருக்கிறார். அவர் கலைபயின்றது ராணுவ கலாசாலை ஒன்றில்தான் என்னும் விஷயத்தைக் கவனிக்கும்போது அவர் ராஜாங்கத்துறையில் இவ்வளவு தேர்ச்சி பெற்றிருப்பது அதிசயிக்கத் தக்கதே.

'உரிபோல்' சண்டையிலும், மஹாயுத்தத்தில் 'காலிபொலி'ப்போரிலும், அங்கு காட்டிய சாமர்த்தியத்தைக்கண்டு ஜெர்மனி ஜெனரல் 'லிமான்வான் ஸாண்டரஸ்' அவரைக் கமாண்டராக்கிய பின்பு, 1918ம் வருஷத்தில் யுத்தம் நிறுத்தியபின் துருக்கிய படையில் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகவும் உழைத்தார்.

தம் மரியாதைக்குச் சற்றும் ஹாநி ஏற்படுதவில்லாத ஸமாதானதுக்கு அவர் தயாராயிருக்கிறாராம். கிரேக்கர்கள் தத்க்ஷணமே 'சிறு ஆசியா' (Asia Minor) பிரதேசத்தினின்று விலக வேண்டுமென்று அவர் வற்புறுத்துகிறார்—

'டைம்ஸ்' பத்திரிகையில் டௌன்ஷெண்ட் எழுதியது.

ரவீந்த்ர நாத் தாகூரும் அவர்தம் ஆப்த நண்பராம் ஆண்ட்ரூஸ் என்பவரும் செப்டம்பர்மீ 29உ 30உ சென்னைக்கு விஜயம் செய்திருந்து ஷை வெள்ளி, சனியன்று கோகலே மண்டபத்தில் இரண்டு உபந்யாஸங்கள் புரிந்து இருவரும் கோயம்பத்தூர் முதலிய பற்பல தமிழ்நாட்டு நகர்ப்புறங்களையெல்லாம் சுற்றிக்கொண்டு மறுபடியும் நேற்று ஞாயிறன்று சென்னைக்குத் திரும்பிச் சிலருடன் ஸம்பாஷணைகள் புரிந்து புரசைவாக்கம் ரவீந்திரநாத் சபையில் பிரஸங்கஞ் செய்தனர்.

துருக்கியர்களும், கிரேக்கர்களும் ஆங்கிலப் ப்ரென்சு ராணுவாதிகாரிகள் முதலியோர்களுக்கும் கிரேக்கா துருக்கிய தற்கால நிலைமையைக் குறித்தும் முடாநியா என்னும் ஸ்தலத்தில் சேர்ந்திருக்கும் சமாவேசம் இடையிடையில் பயனற்றுக் கலைந்து போகுமோ என்ற பயத்துடனேயே நித்ய கண்டம் பூர்ணாயுசாய் நடைபெற்றுவருகிறது.

வட வங்காளத்தில் சுமார் ஏழு நூறு எண்ணூறு சதுரமைல் விஸ்தீர்ணம் வெள்ளம் பிடித்திருப்பதாகவும் ஆங்காங்கு சிற்சில விடங்களில் பன்னிரண்டடி ஜலம் ஏறியதாகவும், இவ்வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட துன்பம் மனிதர்கள் எப்போதும் கண்டுங்கேட்டிராத ஆற்றொணாத் துயரை விளைவித்திருக்கிறதெனவும், இவ்வளவு சங்கியையென்றறிதற் கியலாத மாடு மனிதர்கள் மடிந்தனரெனவும், பலகிராமங்கள் அடியோடு தரையோடு

தரையாய் விட்டன வெனவும் தந்தி செய்தி. ஸர் ப்ரபுலிய சந்திர ராய் என்பவர் செய்த பிரஸங்கத்தில், வெள்ளம் ஏறுங்காலத்தில் பலர் மரங்களின் உச்சியைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்து கடைசியில் கையால் பிடித்துக்கொள்ளச் சக்தியற்று ஜலத்தில் விழுந்து மாண்ட தாகவும், பல கிராமங்களில் ஆடுமாடு மனிதர் வர்க்கப் பிணங்களினின்று எழும் துர்நாற்றம் சஹிக்கக் கூட வில்லை யெனவும், சுமார் இருபது லக்ஷம் ஜனங்கள் கட்டத் துணியின்றி நிற்க நிழலின்றி, குடிக்கக் கஞ்சிகூட இல்லாமல் பரிதவிக்கின்றனரெவும் மனதைப்பிளக்கும்படி வெள்ளத்தின் வரலாற்றை யெடுத்துரைத்தார். சிலர் சுரேந்தரநாத் பானர்ஜி, அஷுடோஷ் முகர்ஜி, சித்தரஞ்சன் தாஸ் முதலியோர் கஷ்டநிவார்த்திக்காக முனைந்து நின்று உழைக்கிறார்கள். நமது வாசகர்களும் அவருடைய நண்பர்களும் தங்களாலியன்ற பொருளுதவி செய்வது அவரவர்களுடைய பிரதம கடமையாகும்.

சாரதா ஸல்லாபம்

சமீபத்தில் ஸிம்லாவில் ஸாப்ரு பிரபுவுக்கு நடந்த விருந்தில், அவர் வெகு ஆச்சரியமான விஷயமொன்றை வெளியிட்டார். 'நான் பள்ளிக்கூடத்தில் படித்த நாள் முதலாக இவ்விந்து ராஜ்யத்தை பரிபாலனம் செய்யும் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் பெரும் பொறுப்பை வகிக்கும் திறமையுடையவர்களென்றும் இதையறியாத மாந்தர்களில்லை யென்றும் நினைத்திருந்தேன். இப்பொழுது அது சரியல்ல' வென்றும் ஸாப்ரு பிரபு தான் துரைத்தன நிர்வாக சபையில் சேர்ந்த பிறகே யிவ்விஷயத்தை யுணர்ந்ததாகவும் சொன்னார். இது பெரியபுதுமையாகும். இதிலும் புதுமை இவ்வாறுதெரிந்து கொள்ளும் பொருட்டு அவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ-6666க்குமேல்சம்பளம் கொடுத்த துரைத்தனத்தாருடைய வள்ளற்றன்மையேயாகும். எவ்விஷயங்களையும் கற்றுக்கொள்பவன் பணங்கொடுப்பதைக் கண்டிருக்கிறோம். பொருள் பெற்றுத் தெரிந்து கொள்பவரையும் இப்பொழுது கண்டோம்.

❀

திரு நாளைப் போவார் சிறப்படைந்த சிதம்பரத்தில் ஆதித்திராவிடர்கள் கூடிப் பேசியதழகே. அதிலும் அழகு அக்கிராஸனம் வஹித்த ராவ் பகதூர் கந்தசாமி செட்டியாரவர்கள் தற்காலத்தில் 'நியாய கட்சி'யெனப்பெயர்வைத்து நிர்வாகம்செய்யும் சீமான்களுடைய நியாய விரோதங்களை யெடுத்துவெளிப்படுத்தியதாகும். சிறு பிராயம் முதல் செட்டியாரவர்கள் தனது அபிப்பிராயங்களைப்பயமின்றி வெளியிடுபவரென்றும், கூர்மையான புத்தி கொண்டவர் என்றும் நினைத்திருந்தேன். ஆனால் அவர் இங்'நியாயகட்சி' ஏற்பட்ட காலத்திலேயே அது இந்நிலைமைக்குத் தான் வருமென்றுணராதிருந்தது வியக்கத்தக்கது. பூர்வ சரித்திரங்களைப் படித்த எவரும் ஜாதியபிமானத்தா லுண்டாகும் கட்சியெல்லாம் முதலில் எக் கஷ்டங்களை நிவர்த்திக்க முயல்கின்றனவோ அவற்றையே முடிவில் அதிகமாக்கு மென்பது திண்ணமென்ற றிந்திருக்கலாம். இச் சென்னை இராஜதானியில் நிலை பெற்றிருக்கும் 'நியாய கட்சி' இவ்வாறு முடியாதென்று அவர் நினைத்திருந்தால் அது அவரது குற்றமாகும். பொதுஜன நன்மைக்கு பாடுபடுபவர்களுக்கும் ஜாதியபிமானம் கூடுமோ? செட்டியாரவர்கள் எடுத்துரைத்த விஷயங்களை நியாய கட்சியார் நன்றாய் கவனிக்க வேண்டும்.

❀

லோபி ஏழை பொருளை யெனதெனது என்றிருப்பான்,' அதையே திருடன் தனது தனது என்று இருப்பான், என்பதுபோல் தாழ்ந்த வேலையாளர்கள் வயிற்றிலடித்துச் சேர்த்துவைத்த இச்சென்னை மாகாணத்தின் பணத்தை டில்லியிலிருக்கும் துரைத்தனத்தார் கவர்ந்து கொண்டது ஆச்சரியமல்ல. நமக்குச் செலவழிக்கும் வழி தெரியும் வரையில் நம்முடைய பணம் அவர்களெடுத்துக் கொள்வதாயும் பிறகு விட்டுவிடுவதாயும் சொன்னது விசேஷமில்லை. அவ்வாறு சொல்லும்படி யிடம் கொடுத்து பணம் தேடிவைத்த நம்முடைய அறிவீனத்தையே மெச்சவேண்டியிருக்கிறது.

❀

ஸிம்லாவில் சட்ட நிர்மாணசபையில் தேசப்பிரதிநிதிகள் அவசியமில்லை யென்று தள்ளிவிட்ட பத்திரிகைகளைக் குறித்த சட்டம் அவசியமென்று இராஜப்பிரதிநிதியவர்கள் சொல்லித் தீர்மானம் செய்ததைப் பார்க்குமிடத்தில் சாமான்ய காரணங்களால் அவ்வாறு சொல்லியிருக்க மாட்டாரெனத் தோன்றுகிறது. பால்யம் முதல் சட்டதிட்டங்களிலேயே பழகி நியாய ஸ்தலத்தில் தலைமையடைந்த அவர் எளிதில் இத்தீர்மானத்திற்கு வந்திருக்கமாட்டா ரென்பதில் ஐயமில்லை. எனக்குத் தோன்றியமட்டில் இராஜப்பிரதிநிதிகளுக்கும் தேசப்பிரதிநிதிகளுக்குமுள்ள பலாபலத்தை வெளிக்காட்ட எண்ணியே யிவ்வாறு செய்திருக்க வேண்டும். தேசப்பிரதிநிதிகள் கொஞ்சநாளாய் தங்கள் திறனின்னதென்றறியாது இராஜ்யகாரியங்களில் பிரவேசித்து மாறுதல்களைச் செய்ய எத்தனித்தார்கள். இது சரியல்ல வென்பது அதிகாரிகளுடைய அபிப்பிராயம். ஆனால் கொஞ்சம் விட்டால் எவ்வளவுதூரம் போகிறார்களென்று பார்த்தார்கள். அளவுக்கு மிஞ்சி செல்வதாகத் தெரிந்தவுடன் தடுத்துவிட்டார்கள். ஆடு தன் வாலின் நீளமறியாது ஆட்டுவது போலாயிற்று.

❀

இந்தியாவில் மகா கவியென விளங்கும் ரவீந்திரநாத் தாகோர் தன்னை ஸம்மானித்த மேல் நாட்டார், பொருளாசையும் பரஹிம்ஸையுமே குல தர்ம மாகக் கொண்டவர்களெனக் கூறியதற்காக ஆங்கில பத்திராதிபர் ஒருவர் கோபங்கொண்டு அவர் நன்றியறிவில்லாதவரென இகழ்ந்தார். உள்ள குற்றங்களை மறைத்துப்பேசுவது நன்றியறிவிற் கடையாளமென்றும் குற்றங் கூறுவது பகைவரது தொழிலென்றும் இப்பொழுது தெரிந்து கொள்ள வேண்டிவந்தது. இதுவரையிலும் உற்ற குற்றங்களை எடுத்துக்காட்டுவோரே உண்மையான நண்பர்களென்றும், அவ்வாறில்லாது மறைத்து வீணில் புகழ்வோர் பகைவரென்றும் நம்பியிருந்தேன். அதுபிசகென்று பத்திராதிபர் சொல்வது அவரது அறிவின் முதிர்ச்சியையே காட்டும். அன்றியும் பத்திராதிபர் மேல் நாட்டுகளில் நடந்த பெரும் போரில் கொலைக்களக் கொடுமைகளை மறந்துவிட்டனர்போலும். பிறகு சமாதானம் பேசிய காலங்களில் வெளியான பேராசையையும் அறிந்திலர் போலும்.

❀

நான் நாற்பது வருஷங்களுக்கு முன் சென்னைக்கு வந்த காலத்தில் நாட்டுபுறத்தார் கடைத்தெரு வழியே சென்றால், அவர்களை கடைகளிலுள்ளவர் கைகளைப்பிடித்து அங்குமிங்குமாய் இழுக்க, அவர்கள் தியங்கிப்பிரமித்து நிற்பதைக் கண்டதுண்டு. இப்பொழுது ஆதித்திராவிடர்கள் அந்நிலைமையில் இருப்பதைப்பார்க்க ஆச்சரியமடைந்தேன். முன்னர் அவர்களைக்கண்டால் ஒதுங்கிச் சென்றவர்களெல்லாம் அவர்களோடு உறவு கொண்டாடுவதும் புதுமையே. கந்தசாமிசெட்டியாரவர்கள் ஆதித்திராவிடர்களைத் தன்வசமாக்கிக் கொள்வாரெனப் பயந்து சீமான் பனகால் இராஜா அவர்களும் மதுரைப் பிள்ளையவர்களும் வெகு சிரமப்பட்டு திராவிடர்களின் நன்மையை உத்தேசித்து 'நியாய கட்சிக்காரர்கள் செய்து முடித்த விஷயங்களை யடுக்கியுரைத்தார்கள். தாழ்ந்தோர் உயர்வர், உயர்ந்தோர் தாழ்வர் என்னுமிதுலக வழக்கே.

கோபுரத் தரிசனமே பாபவிமோசன மெனச் சொல்வது வழக்கம். கோபுரத்தைக் கண்டு கோயிலிலுள்ள கடவுளைக் கண்டதாக எண்ணுவது பக்தி வாய்ந்த மாந்தரியற்கை. மகாத்மா காந்தியின் சிறைச்சாலை வாசலில் சென்று அவர் பிறந்த நாளன்று அச்சாலையைக் கைதொழுத சீமாட்டிகளின் மன நிலையை நோக்கின், மகாத்மாவின் விபவம் சொல்லவும் கூடுமோ. அறியாதார் பலர் அவர் மருளடைந்து உலகியலை யறியாது பிதற்றுபவரென்றும், மற்றும் சிலர் அவர் தெய்வத்தன்மை வாய்ந்த அவதார புருஷனென்றும் கூறுவர். இவ்விரண்டும் சரியல்ல. எல்லாரும் விரும்பத்தக்கதும் ஸாமான்யமாய் அடைய முடியாத சிரேஷ்டமான ஜீவ காருண்யமும் சத்திய முறையும் வாய்ந்திருப்பது பற்றியே அவர் யாரினும் மேன்மை பட்டவரென எண்ணப்படுகிறார். குணங்களால் உயர்ந்து அவர் மாந்தர்களின் மனதில் குடிகொண்டிருப்பதால் தேகத்தை யொளிப்பதினால் அவரை மறைக்க வெண்ணுவது பகலவனை கைகொண்டு மறைக்க வெண்ணிய தொக்கும்.

கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் பண்ணுவது மாந்தர்களின் இயல்பே. ஆனால் அது அறிவுடையோருக்கு அழகல்ல. இப்பொழுது ஐக்கிய மாகாணத்தில் மந்திரியார் ஆங்கில பாஷையை இந்தியர்களுக்குக் கற்பித்தது பிசகென்றும், அவர்களைத் தங்கள் வேத பாஷையைக் கற்கவிட்டு அவர்களுடைய புராதன மார்க்கங்களிலேயே நிலை நிறுத்துவது உசித மென்று கண்டுபிடித்துக் கொண்டார். இவருக்கு ஸம்ஸ்கிருத பாஷையிலுண்டாகிய அபிமானம் மிகவும் வியக்கத்தக்கதே. ஆனாலவர் ஆங்கில பாஷையைக் கற்றதனாலேயே இப்பொழுது இத்தேசத்தாருக்கு சுவராஜ்ய உணர்ச்சி வந்தது என்று நினைத்தார் போலும். அவர் உண்மைக் காரணத்தை உணர்ந்திலர். புஸ்தகத்தாலேயே அறிவுண்டாகுமென்று அவரெண்ணியது அவரது புத்தி நுட்பத்தைக் காட்டவில்லை. வியாதியின் மூல முணராது, காணப்பட்ட பொருளெல்லாம் நோய்க்காதாரமென வெண்ணும் வைத்தியன் போலானார்.

இமையவர் இடுக்கண்

(ராமசந்திரர் எழுதியது)

[Rights of Translation Strictly Reserved.]

சமீபத்தில் வந்த சூரியகிரஹணத்தின் பொழுது, வானம் பசந்து, நிலம் குளிர்ந்து, வாடை வீசிற்று. என் மனமும் மருளடைந்தது. அதை நீக்க நினைந்து, காசியபருடைய ஆசிரமத்தை யடைந்து, முனியடி பணிந்து, உலகின் இயல்பைப்பற்றி எனக்குண்டாயிருந்த சந்தேகங்களைத் தெரியப்படுத்திக்கொண்டிருக்கையில், வெளியில் கலகலவென்ற சப்தம் கேட்டது. திரும்பிப்பார்க்கும் பொழுது, ஆகாயத்திலிருந்து ஓர் ஸ்வர்ணமயமான இரதம் இறங்கிவந்தது. அதினின்று இழிந்த இந்திரன், வெண்குடை நிழற்ற, இருபுறமும் சாமரை வீச, ஆசிரமத்தின் வாயிலையடைந்து, அங்கிருந்த முனிவரது சிஷ்யரைத் தன் வரவைத் தெரிவிக்கவேண்ட, அவரும் தபோதனரடிபணிந்து கூற, உடனே அழைத்து வரச் சொல்லவும், இந்திரன் தன்னுடைய பரிவாரங்களுடன் பிரவேசித்துக் காசியபரை அதிவினயத்துடன் நமஸ்கரித்து, தனது ஆயிரம் கண்களிலும் நீர் ததும்ப நின்றான். இதைக் கண்ட தவசியும் சிறிது நேரம் கண்மூடித் தியானித்துப், பிறகு பெருமூச்சுவிட்டு, கண்திறந்து, மொழிவதானார்.

காசியபர்—"மைந்தா, நீ உனது புண்ணியவசத்தால், பொன்னுலகடைந்து, புகழ்விளங்க, அமரர்களுக்கு இறைவனாய் விளங்குவதைக் கண்டு மனமகிழ்ந்திருந்த எனக்குத், துயரை விளைவிக்கும்படி, இவ்வாறு வாடிய முகத்தனாய் நீ வந்திருப்பதைப் பார்த்தால், ஏதோ இமையவர்களுக்குத் தடுக்கவொண்ணாத இடுக்கண் நேர்ந்திருப்பதாகத் தோன்றுகின்றது. அதிலும், உங்களுடைய சகோதரர்களும், உங்களோடு நெடுங்காலமாக ஒற்று வாழ்ந்தவர்களுமாகிய அசுரர்களால் இடைஞ்சல்கள் உண்டாயிருக்குமென்று உணர்கிறேன். தற்காலத்தில் அசுரர்கள் இயக்கர்களை நாசப்படுத்தி, முன்பு போல் பொன்னுலகில் தமது ஸ்தானத்தை அடைய எத்தனிக்கிறார்கள் போலும்! அதைக் கண்ட அமரர்கள் மனங்கலங்கி வாடுகிறார்கள்? இதற்கெல்லாம் என்ன செய்ய எண்ணி இங்கு வந்தாய்?" என்றார்.

இதைக் கேட்டவுடன், அருகிலிருந்த க்ருசானு எழுந்து, அதிக கோபத்தோடு, பேசத்தொடங்கினான்.

க்ருசானு—"எம் இறைவே! —தாங்கள், அசுரர்கள் எங்களுடைய சகோதரர்களென்று சொன்னீர்கள். தங்களுடைய வாக்கினால் மாத்திரம் நம்பவேண்டியிருக்கின்றது. அவர்களுடைய குரூரமான கர்மங்களையும், அவர்கள் ஸுரையை வெறுத்துத்தள்ளி, தேவர்களை இகழ்ந்து ஹிம்ஸிப்பதையுங் கண்டால், அவர்களை அவ்வாறு மதிக்கவும் கூடுமோ? அமரருலகில் அணு இடங்கொடுத்தால்கூட, அவர்கள் பொன்னாட்டை யெல்லாம் அபகரித்துவிடுவார்கள். அமரர்பதிக்கே வழி திறந்துவிடும். நாங்கள் மூவுலகத்திலும் எங்கள் அரசு செலுத்த இயலாது. இதன்றியும், அசுரர்கள் தேவர்களிலும் மேன்மை யுள்ளவர்களென மாந்தர்கள் மதித்து, எம்மையும் முன்போல் பூஜியார்கள். நாங்களும், இருக்கை இழந்து, தங்களுடைய ஆசிரமத்தை யடைந்து தவமுயல்வதல்லாது, வேறுகதியில்லாமற்போம். இதையெல்லாம் யோசித்தே, நான் மகாராஜாவினிடத்தில்

முன்னமே அசுரர்களை அடித்துத் துரத்தவேண்டுமென்றேன். அதற்காக நம் பலத்தையெல்லாம் விருத்திப்படுத்தியும் வைத்திருக்கிறேன். தைத்தியர் முன்னுக்கு வருவதன் முன்னமே, நம் பலங்கொண்டு, அவர்களை அகற்றுவதே தகுந்த உபாயம். கால நிலையை உற்றுநோக்கில், 'நான்காம்' உபாயமாகிய தண்டமே பயன்படுமென்று நினைக்கிறேன். இனி காலதாமதம் செய்வது சரியன்று. பகவான் எப்படிக் கட்டளையிடுகிறீர்களோ, அப்படியே செய்யத்தயாராயிருக்கிறோம்.''

என்று சொல்லிக், கிருசானுவும் தணிந்தவுடன், அருகிலிருந்த, புத்தியிற் சிறந்தவரான பிருஹஸ்பதியை முனிவரும் பார்க்க, அவரும் எழுந்து வணங்கிநின்று, விநயத்தோடு கூறுவர்.

பிருகஸ்பதி—''மனதில் அதிக தாபத்தோடு, கிருசானு கூறிய மாற்றங்கள் நன்றாய் கவனிக்கத் தக்கவைகளே. ஆனாலும், காலமும், இடனும், மாற்றான்வலியும், துணைவலியும் எண்ணி, ஒரு பிரயத்தனம் செய்வதல்லாது, பிடித்ததே பிடிவாதமாகச் செய்வது கேட்டை யுண்டுபண்ணும். முதலில், நாம் கொஞ்சகாலத்திற்கு முன், ராக்ஷஸர்களோடு செரு இயற்றித் தளர்ச்சி யடைந்திருப்பதை கிருசானு கவனித்தானில்லை. நம்மிடத்தில் தோல்வியடைந்து சிதறிப்போன அரக்கர்கள் அசுரர்களோடு கலந்திருப்பதாயும் கேள்விப்படுகிறேன். மேலும், நாம் முக்கியமாக கவனிக்கவேண்டியவிஷயம் மற்றொன்று இருக்கின்றது. நெடுங்காலமாய், அசுரர்களுக்கும் மனிதர்களுக்கும் மனஸ்தாப முண்டு. அதை நம்முடைய பிரியர்களாகிய பூஸுரர்களைக்கொண்டு விருத்திசெய்து வந்தோம். பூஸுரர்கள் நமது ஆற்றலையும் அறிவையும் விஸ்தாரமாய் எடுத்துரைப்பதல்லாது, அசுரர்களையும் அரக்கர்களையும் நிந்தித்து, மானிடர்களை நமது அன்பர்களாக்கி வந்தார்கள். இப்பொழுது நமது பகைவர்கள் தங்களுக்குரியதான குரூரத்தொழில்களை யடக்கிக்கொண்டு, மானிடர்களிடத்தில் அன்பு பாராட்டி, அவர்களைத் தம் வசப்படுத்தி, நம்மை விட்டுப்பிரிக்க, எத்தினம் செய்து வருகிறார்கள். நம்மை எப்பொழுதும் பூஜித்துவந்த பூஸுரர்கள்கூட, மதிமயங்கி, அசுரர்களோடு நட்புகொண்டார்கள். அமரர் உலகில் அசுரர்களடைந்த வெற்றியினாலேயே, மானிடர்கள் அவர்களிடத்தில் கௌரவம் வைத்துவிட்டதாகக் காணப்படுகின்றது. இன்னும் அசுரர்களோடு, நாம், தளர்ந்திருக்கும் சமயத்தில் பக்க பலமில்லாமல், போர்செய்தல் கூடாது. அப்படிச் செய்தாலும் ஜயமுண்டாகு மென்பது சந்தேகம். அதன்றியும், கொஞ்சகாலமாக நம்மிடத்தில் அன்பு குறைந்து வருகிற மானிடர்கள் முற்றும் நம்மைவிட்டுப் பிரியவேண்டி வந்துவிடும். இவைகளையெல்லாம் தீர்க்கமாய் ஆலோசிக்குமிடத்தில், அஸுரர்களை முதல் உபாயத்தால் வசப்படுத்திக் கொள்வதே நலமென நினைக்கிறேன். அவ்வாறு செய்வதினால், தற்காலத்தில், பொன்னுலகில் இடைஞ்சல்கள் உண்டானாலும், அநேகவிதமான சௌகரியங்களுண்டாகும். முக்கியமாய் மானிடர்களுக்கு அசுரர்களிடத்திலிருக்கும் பிரியம் குறைந்துவிடும். நம்மிடத்தில் அன்பு மிகும். நாமும் முன் போலவே, சிறப்பெய்தி வாழலாம். இவ்விடத்தில் எப்படிக் கட்டளையிடப்படுகிறதோ, அப்படியே செய்யத் தயாராயிருக்கிறோம்.''

என்று தேவகுரு கூறியபின்னர், முக்காலமும் உணரவல்ல காசியபரும், கண்மூடி ஒருகணமிருந்து, பிறகு மிருதுவாய் எடுத்துரைப்பர்.

காசியபர்—''மனதிற்கினிய மைந்தர்காள்!—கிருசானு கோபாவேசங்கொண்டு கூறியதையும், பிருகஸ்பதி யுக்தியனுபவங்களை யொட்டியொழிந்ததையும் கேட்டும், அவ்விருவர்கள் சொல்லும் மார்க்கங்களில், என் மனஞ்செல்லவில்லை. என்வரையில் நீங்களேயன்றி, அசுரர்களும் மானிடர்களும் அன்பிற்குரியவர்களே. எல்லோரும் என் மக்களாயிருந்தும், ஒருவருக்கொருவர் பொருத்தமில்லாது, பகைத்துத் திரிவதைக்கண்டு, நான் எப்பொழுதும் வருந்தாநிற்கிறேன். நீங்கள் கூறியபடி, அசுரர்களே குரூரஸ்வபாவ முள்ளவர்களென்றுவது, மானிடர்களே எப்பொழுதும் பிறரைப் பூஜித்துத் திரிபவர்களென்றுவது நான் நினைக்கவில்லை. அசுரர்களும் அநேக காலம் தவமியற்றி, நற்குணங்கள் அடைந்திருக்கிறார்கள். மானிடர்களும் அவ்வாறே புத்தி விசாரத்தால் உண்மை ஞானம் அடைந்திருக்கிறார்கள். இந்நிலைமையில் அவர்கள் அனைவரிடத்திலும் அன்பு பாராட்டிப் பிரியம் சம்பாதிப்பதை விட்டு, பேதத்தாலும் தண்டத்தாலும் பயனுண்டாகாது. நான் அறிந்தவரையில், என் பிரியமுள்ள மக்களில் ஒருவனாகிய ஆனந்தன் என்பவன் தனது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் ஒருங்கே சேர்த்து, ஸர்வ பிராணிகளிடத்திலும் தயையும் அன்பும் விளங்கச் செய்ததால், பூவுலகன்றி, பொன்னுலகிலும் அநேக வேறுபாடுகள் உண்டாய்விட்டன. தேவர்களில் அநேகர் தாங்கள் யாரினும் மேன்மைப்பட்டவர்களென்றும், யாவராலும் பூஜிக்கப்படவேண்டுமென்றும் முன்போல நினைப்பதில்லை. அப்படியே, அசுரர்களும் தங்களுக்குண்டாகிய பராக்கிரமங்களெல்லாம் பிறருடைய நன்மைக்கு உபயோகமாக வேண்டியதல்லாது, அவர்களுக்குத்துன்பம் விளைவிக்கலாகாதென்று நினைக்கிறார்கள். பின்னும் ஜீவஹிம்ஸை செய்வது தகாதென்றும் எண்ணங்கொண்டிருக்கிறார்கள். மானிடர்களோவென்றால், நித்தியாநித்திய விவேகமடைந்து, காணப்பட்டவையெல்லாம் அழியத்தக்கன வென்று அறிந்து, தேவர்களது மகிமையும், அசுரர்களது ஆற்றலும் அழியும் தன்மையவென்றும், அவைகளைக்கண்டு மயங்குவது மதியுடையாருக்கு அழகல்லவென்றும் உணர்ந்து, சீற்றம் ஒழித்து, மதாபிமானத்தை வெறுத்து, ஞானத்தையே கைப்பிடித்து, மோக்ஷஸாம்ராஜ்யத்தில் ஆவல் கொண்டிருக்கிறார்கள். அவர்களை, ஸ்வர்க்கபோகங்களைக்காட்டி, வசப்படுத்த எத்தனிப்பது வியர்த்தமாகும். அவர்கள் செல்லும் வழியிலேயே விட்டு, நீங்களும் அவர்களிடத்திலிருக்கும் நற்குணங்களை ஆதரித்து அனுஷ்டித்தல் இன்பம் விளைவிக்கும். இதன்றி, முன்போல் அவர்களைபயப்படுத்தி யடக்கி ஆளுவது கூடாதகாரியம். உலகத்தில் ஆசையுடையவருக்கன்றோ பயமுண்டு! ஆசையொழித்த மாந்தரை யடக்குதல் கூடுமோ! அவரது அன்பை யடையவேண்டிய உபாயம் செய்வதே உசிதமென நினைக்கிறேன். நீங்கள் இவ்வுறுதிகளைக் கடைப்பிடியாகக் கைக்கொண்டு, அசுரர்களும் மாந்தர்களும் உங்களுடன் பிறந்தவர்களென்பதை மறவாது, அவர்களை அன்போடு அணைந்து வாழக்கடவீர்கள். கிருசானுவும் குருவும் சொல்லிய உபாயங்களில் மனதைச் செலுத்தவேண்டாம்.''

என்று சொல்லியவுடன் கிரஹணம் விட்டுவிட்டது. நானும், மனதிலுற்ற சந்தேகங்கள் நீங்க, வீடுவந்து சேர்ந்தேன்.

—''ராமசந்திரர்''

தினசரி 16 லட்சம் ரூபாய்

[K. S. வெங்கடரமணி, M. A. B.L.]

அமெரிக்கா தேசத்து மோடார் பிரபுவான ஹென்ரி போர்ட் (Henry Ford) என்பவருக்கு தினசரி வருமானம் ரூ. 16 லட்சமாம். கோடீசுவரர்களுக்குள் முதன்மை வகித்துவந்த மண்ணெண்ணை பிரபுவான ராக்பெல்லர் என்பவரை இந்த மோட்டார் பிரபு முந்திவிட்டாராம். இந்த பிரபுக்களின் பணம் சேர்க்கும் விளையாட்டு சண்டையிலிருந்து தான் பாமர ஜனங்களுக்கு உணவுக்கில்லாத கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இது எவ்விதமென சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

மேல் நாட்டில் குபேரனான கதைகளை யோசித்தால், மோசடியே. உண்மையானவும் பிறருக்கு உபயோகமுள்ளதுமான விவசாய அபிவிருத்தியினால் உண்டான மேழைச் செல்வமல்ல மேல்நாட்டு குபேரர்களது. மனிதனுக்கு வேண்டாத பொருள்களைத் தேடி, 'டீ சாப்பிடுங்கள், இனிமையானது, தேகத்திற்கு இன்றியமையாதது' என்று பலவாறான பொய்க்கதைகளை கட்டி விளம்பரங்களை தெருத்தெருவாய் ஒட்டி, படித்தும் படிப்பில்லாத மானிட மனதைக் கலக்கி, இந்த மண்ணெண்ணை மோட்டார் பிரபுக்கள், தானாகப் பெருகும் கீழ் நோக்கிச் செல்லும் வெள்ளம் போல், தனது பணத்தைப் பெருக்கி அக்கம் பக்கத்திலுள்ள நட்பையும் ஈரத்தையும் கவர்ந்து விடுகிறார்கள். இவ்வித நமது தற்கால நாகரீகத்தின் செல்லக் குழந்தை ஏழ்மைத்தனமே. நாடெங்கும் விளைந்தும் பால் பொங்கியும் 90 பேருக்கு சாப்பாட்டிற்கில்லாததே நமது பெருமை. ஏனென்றால், 10 பேர் மோட்டார் பிரபு ஆகவேண்டாமா?

போகட்டும், இந்த 'தினசரி 16 லட்சம்' செல்வத்தை போர்ட் என்பவர், மருபடியும் மோடாரின் அபிவிருத்திக்குப் போடாமலும், பாங்கியில் தூங்கவைக்காமலும், கிணறு குளம் வெட்டி, ஏழைகளுக்கு சிறிய வீடுகளைக் கட்டி, நூதன கிராமங்களைக் கல்பித்து, பாசன மார்க்கங்களைத் தேடி, விருத்தி செய்து, உணவு பண்டங்களை அதிகரித்து வந்தால், பூலோகத்தில் எவ்வளவு சுகம், மேன்மை இராது. மேல் நாட்டில் படித்தவர்களுங்கூட, தங்கள் புத்தியை மோடாரைப்போல், உயிரில்லாத் தொழிலில் செலவழிக்கும் வரையில், இவ்வுலகில் மேன்மை யேது? இவ்வுயிரில்லாத் தொழிலுக்குத்தான் 'Industrialism' என்ற பெயர் ஆங்கிலத்தில் வழங்குகிறது. இஃது உயிரைக் குறைக்கும் ஓர் குஷ்ட வியாதி. வெள்ளைக்காரர்களிடமிருந்து நமக்கும் பரவுகிறதே!

ரிஷிகள் வம்சாவளியை தினசரி உச்சரிக்கும், நாமும் இத்தொழில் செய்யலாமோ? தாதா கம்பெனியிலும், ஆமதாபாத் மில்களிலும், நமது சரீரத்தை நாசமாக்கலாமோ? ஒரு ஏகர் நிலத்தை புதிதாய் சாகுபடிக்கு கொண்டு வருபவனுக்கு மோக்ஷம் உண்டு. 'தினசரி 16 லட்சம்' ஸம்பாதித்தும் உயிரில்லாத் தொழிலைக் கைக்கொண்டிருப்பதில் யாது பயன்.

பாபு மோதிலால் கோஷ்

சமீபத்தில் காலஞ்சென்ற பாபுமோதிலால் கோஷ் என்பவர் 'அமிர்த பஜார்' பத்திரிகை என்று நாடெங்கும் பிரசித்திபெற்று விளங்கும் வங்காளப் பத்திரிகையை ஸ்தாபித்து 55-வருஷகாலமாய் அதை நடத்திவந்தவர். அவர் இந்த பத்திரிகையைத் துவக்கும்போது வங்காளத்தில் பத்திரிகைகள் அதிகம் இல்லை. இவரும் இவருடைய பிரிய சகோதரர்களும் தங்களுடைய தாயார் 'அமிர்தமாயி' அம்மாளின் பெயரைக்கொண்டு 'அமிர்த்த பஜார்' என்று அழைத்து வந்த "ஜெஸ்ஸார்" என்கிற தங்களுடைய கிராமத்தினின்றுமே இதை வெளியிட்டு வந்தார்கள். ஆரம்பத்தில் கை அச்சு யந்திரத்தில்தான் பத்திரிகையை அச்சிட முடிந்தது. 'கோஷ்' சகோதரர்களே அச்சு ஆபிஸ் வேலையையும் பத்திராதிப வேலையையும் பார்த்து வந்ததோடு முதலில் அச்சிடுவதற்கு வேண்டிய 'மை' கூட்டுவதும் அச்சுக்கோர்ப்பதுமாகிய வேலைகளையும் இவர்களே பார்த்து வந்தார்களாம். அந்தக் காலத்திலேயே தீங்கு செய்பவர்களெல்லாம் பயப்படும்படியும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நடுங்கும்படியும் அவர்களுடைய தீச்செயல்களைக் கண்டித்தும், ஏளனம் செய்தும், கட்டுக்கதைகளின் மூலமாய் பரிகசித்தும், வந்ததால் சீக்கிரத்தில் நாடெங்கும் புகழ்பெற்று விளங்கியது "அமிர்த பஜார்" பத்திரிகை. அப்போது வங்காள பாஷையிலேயே அதை அச்சிட்டு வந்தனர். இப்படி தைரியமாய் உண்மைகளை எடுத்துக் கூறி சட்டத்தை எங்கு மீறி விடுவோமோ, அதனால் தண்டனைக்கு உள்ளாவோமோ என்ற பயமின்றி பத்திரிகையை நடத்தி வந்தகாலத்தில், உத்தியோக முறையினரின் கோபத்தால் இவர்கள் சட்டத்தை மீறினர் என்று குற்றம் சாட்டப்பட்டனர். அதினின்று தப்பித்து குற்றவாளிகள் அல்ல என்று விடுதலையாகவே, அதனால் பணச்செலவு அதிகமாயிற்று என்றாலும், பத்திரிகையின் புகழ் எங்கும் பரவியது. உடனே கல்கத்தாவிற்குச் சென்று அங்கிருந்து பத்திரிகையை பிரசுரம் செய்ய ஆரம்பித்தனர்.

லிட்டன் பிரபு ராஜப்பிரதிநிதியாக இருந்த காலத்தில், "அமிர்தபஜார் பத்திரிகை" போன்ற சமாசாரப்பத்திரிகைகள் அநேகம் இந்தியாவில் சுயபாஷையில் அச்சிடப்பட்டுவருகின்றன, அவைகளின் பலத்தை ஒடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் (Vernacular Press Act.) நாட்டுபாஷைகளில் அச்சிடுவதைப்பற்றிய சட்டம் ஒன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் இதற்கு தளராதவர்களோ தீரர்களான "கோஷ்" சகோதரர்கள்? இதின் வரவைஎதிர்பார்த்தே ஆங்கிலத்தில் சிலபழைய அச்சுக்கட்டைகள் வாங்கி இருந்ததால் சட்டம் அமுலுக்கு வந்த தினமே இவர்கள் "அமிர்த பஜார் பத்திரிகை"யை ஆங்கிலத்தில் பிரசுரித்தனர்.

முக்கியமாக இவர் இந்திய அரசர்களுக்கு காவல் போல் அவர்கள் நாடுகளில் இருக்கும் பிரிட்டிஷ் ரெஸிடெண்ட்களில் சிலர் அந்த அரசர்களை உபத்திரவித்ததையும் பயப்படாமல் தன் பத்திரிகையில் கண்டித்து எழுதிவந்தார். இதனால் "ஸர் லெப்பல் கிரிப்பின்" என்ற ஒரு ரெஸிடெண்ட் தன் வேலையை ராஜிநாமா கொடுக்கும்படியாய்விட்டது. மற்ற ரெஸிடெண்ட்களும் 'அமிர்த பஜார் பத்திரிகை'யின் வாய்க்கு பயந்து இருந்தார்கள்.

இப்படி அரசாங்க முறையிலுள்ள பொல்லாங்குகள், தீமைகள், உத்தியோகஸ்தரின் கொடுமைகள், முதலியவற்றை நிர்பயமாய் வெளியிட்டு நியாயத்தை நிலை நிறுத்த முயன்றபோதிலும், ஆங்கிலேயர்களிலும் அரசாங்க உத்தியோகஸ்தர்களிலும் இவருடைய நற்குணங்களை நன்குணர்ந்து இவருடன் நட்புப் பாராட்டி வந்தவர் அநேகர் உண்டு.

இப்படி தைரியமாய் இவர் எழுதிவந்ததின் பயனாக அடிக்கடி சட்ட முறையில் குற்றம் சாட்டப்பட்ட போதிலும் அவைகளினின்றும் இன்னும் அதிகரித்த புகழுடனும் பெருமையுடனும் "பத்திரிகை" மேற்கிளம்பியதே யொழிய அதை அடக்க ஒருவராலும் முடியவில்லை.

இப்பொழுது சில வருஷங்களாகத்தான் நாட்டு பாஷைகளிலோ ஆங்கிலேயத்திலோ பல பத்திரிகைகள் தாய்நாட்டு நன்மையையும் அநியாய கண்டனத்தையும் முக்கிய கருத்தாகக்கொண்டு உலவிவருகின்றன. 'அமிர்தபஜார்' பத்திரிகைதான் இவைகளுக்கு எல்லாம் வழி காட்டி நின்ற முதல்பத்திரிகை.

பாபுமோதிலால் கோஷ் பத்திரிகைக்கு எழுதும் விதமே தனித்துநின்று இது இவர் யெழுதியது என்று யாரும் சொல்லத்தக்க வாக்கு நயத்துடனும் பரிகாசமாயும் சுதா பூர்வமாயும் சண்டிக்கும் அபூர்வ திறமையுடனும் இருக்கும். எல்லோருக்கும் பொருள் எளிதில் விளங்கும்படியான சுலபமான நடையில் எழுதும் வல்லமை பெற்றவர். ஆணியடித்தாற்போலிருக்கும் அவருடைய வசன நடை. கௌரவம் தாங்கி உயர்ந்து விளங்கும் அவருடைய உட்கருத்துகளும்மனோபாவங்களும். யாதொரு குற்றமும் அவருடைய பத்திராதிப முறையில் கண்டுபிடிக்க முடியாது. எந்த விஷயத்திலும் ஒரு கக்ஷியைச் சார்ந்து அதைமட்டும் உயர்த்தி மற்ற நல்ல வழக்குகளை இழிவாகப்பேசும் வகையின் வாசனைகூட இவருக்குத் தெரியாது.

இவர் இப்படி 'அமிர்தபஜார் பத்திரிகை'யை தீவிரமான ஊக்கத்துடன் நடத்திவந்த கியாதியில் இவர் தேசத்துக்கு வேறு துறைகளில் உழைத்தார் என்பதை யெல்லோரும் அறிந்திருக்கமாட்டார்கள். ஊர் நன்மைக்கும், முக்கியமாய் சுகாதாரம் வியவசாயம் கைத்தொழில் முதலியவை விருத்தியடைவதற்கும் ஓயாமல் உழைத்து வருவதுடன் இவைகளைப்பற்றியும் அடிக்கடி பத்திரிகையில் எழுதிவந்தார். "கார்மைகேல்" பிரபு வங்காள மாகாணத்தில் கூட்டப்பட்டஒரு சுகாதார சீர்திருத்தச் சங்கத்திற்கு இவரை சர்க்கார்தரப்பு அங்கத்தினராக நியமித்ததே இதற்கு ஒரு அத்தாக்ஷியாகும.

இவரும் இவர் சகோதரர்களான ஹேமந்தகுமாரர் சிசிரகுமாரர் என்றவரும் பால்லியத்தில் பிரும்ம ஸமாஜக் கொள்கைகளைப் பின்பற்றி மதவிஷயமாயும் சமூக சீர்திருத்த விஷயமாயும் உழைத்து வந்தார்கள். பிறகு இவர்கள் வைஷ்ணவ மதத்தைக் கைக்கொண்டவர்களாய் பிரும்ம சமாஜத்திற்கும் அவசரப்பட்டு சமூக சீர்திருத்தம் செய்ய விரும்பியவருக்கும் விரோதமாய் வைஷ்ணவ மதத்தை அநுசரித்து அதன்படி நடக்கவேண்டும், அந்த மதம் பரவவேண்டும் என்று உழைத்தனர்.

இது விஷயமாய் "ஸ்ரீவிஷ்ணுப்பிரிய பத்திரிகா" என்ற பெயர் புனைந்து "சிசிர குமார் கோஷ்"வெளியிட்ட மாதப்பத்திரிகைக்கு எழுதுவதோடு "மோதிலால்" சில ஆண்டுகளாக "ஹிந்து ஸ்பிரிசுவல் மாகஸீன் (Spiritual Magazine) என்ற ஒரு மாதப்பத்திரிகையும் நடத்திவந்தார்.

இவ்விதம் பல ஆண்டுகளாக புகழுக்குரிய பெருங்காரியத்தைச் செய்தபின் பழுத்த வயதிலேயே இவர் தேக வியோக மடைந்தார் எனினும் நமக்கு இவரை இழந்த வியசனமே மேலிடுகிறது. ஆயினும, ஜீவன் முக்தரும் இஷ்டப்பட்டால் உலகில் மறுபடி தோன்றி உண்மை சுய ஆட்சியை நிலைநிறுத்த வருவார் என்று கிருஷ்ண பரமாத்மா கீதையில் அருளியிருப்பதற்கு அநுசரணையாய் பாபு மோதலாலா தேக வியோக சமயத்தில் இந்தியா இந்த நிலைமையிருக்கும் போது அதற்காக உழைக்க முடியாமல் போகின்றோமே என்ற வருத்தமடைந்தார் என்பதினின்றும இவரது ஆத்மா மறுபடியும் இந்தியாவில் அவதரித்து பொதுஜன நன்மைக்கும் சுய ஆட்சிக்கும் வழிகாட்டி நிற்கும் என்று நம்பி நாம் ஒருவாறு தேறுதல் அடையலாம்.

கைத்தொழில் அபிவிருத்தி

(R. பஞ்சாபகேசன் எழுதியது)

நமது நாட்டில் உணவு பொருள்கள் ஏராளமாக விளைகின்றன. ஆயினும் ஜனங்கள் பலர் ஏழைகளாக ஆகாரமின்றி வருந்துகின்றனர். இங்கு விளையும் தானியங்கள் நம்மவர்களுக்கே முதலில் உபயோகமாவதற்கு ஏற்றுமதியாவதை தடுக்க உபாயங்களைத் தேடவேண்டுமென்று வெகு காலமாக நம்தேசத்தில் கூக்குரல் இருந்து வந்தது. ராஜ்ய பாரம் வகிப்பவர்கள் இவ்விஷயத்தில் வேண்டுமென்றே அலட்சியமாயிருந்து வந்தனர். ஆங்கிலேயர்கள் ஜீவிப்பதற்கு நம் தேசத்திலிருந்து உணவுபொருள்கள் ஏற்றுமதி யாகவேண்டியிருக்கின்றது. நமது தேசத்தில் கைத்தொழில்கள் விருத்தியடையாமலிருந்தால் தான், ஆங்கிலேயர்களின் சரக்குகள் இவ்விடம் அனுப்பப்பட்டு தானியங்கள் இவ்விடமிருந்து வெளியேறும். நாளடைவில் நம் புராதனத் தொழில்களைக் கெடுத்து நம்மை அன்னிய நாட்டினருக்கு அடிமைகளாக ஆட்சி புரியும் அதிகாரிகள் மாற்றிவிட்டார்கள். நாம் எவ்வித தொழில்கள் செய்யவும் திறமையற்றவர்களென்றும், நம் தேசமே தொழிலுக்கு ஏற்றதில்லை யென்றும் பலவாறாக நமக்கு புகட்டிவந்தார்கள். நம்மைவிட வெகு பின்னடைந்திருந்த இதரதேசங்கள் எவ்வளவோ மேம்பாடடைந்து விட்டன. யுத்தகாலத்தில் இங்கிலாந்திலிருந்து சரக்குகள் வரக்கூடாத நிலைமையிலுங்கூட நம் கைத்தொழில் முன்னேறுவதற்கு வேண்டிய ஸாதனங்களைச் செய்யத் தயங்கினார்கள். சட்டசபை அங்கத்தினர்கள் இவ்வித ஆட்சி முறையை பலமாய் கண்டித்த பின்னர், இவ்விஷயங்களை ஆராய்ச்சி செய்வதற்கென்று 'கமிஷன்' ஒன்று வழக்கம்போல் நியமித்தார்கள். இக்கமிஷன்களோ தங்களுடைய சிபார்சுகளை வெளியிடுவதற்கு கூடியவரையில் தாமதம் செய்வதே வழக்கம். இவ்விதம் சிலவருஷங்களுக்குமுன் நியமிக்கப்பட்ட Industrial Commission ஏதோ தேச முன்னேற்றத்திற்கு வேலை செய்வதாக செய்து சில உபாயங்களை வெளியிட்டன. அவைகள் யாவும் உபயோகமற்றன வென்பது நாளடைவில் நாம் அறிந்து விட்டோம். கப்பலில் இறக்குமதி ஏற்றுமதியாகும் சரக்குகளின் மீது வரி விதிப்பதைப்பற்றி விசாரணைசெய்ய சென்ற வருஷம் ஓர் 'கமிஷன்' புறபபட்டது. நாமோ பலதேசங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கும் விதத்தை சரித்திரத்தால் கற்றறிந்து வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகளில் வரி விதிப்பதால் நமது தேசத்தில் அச்சரக்குகளை உற்பத்தி செய்ய அனுகூலமாயிருக்கும் என்று முறையிட்டு வந்தோம். ஜர்மானியர் இருபது வருஷகாலத்திற்குள்ளாக கைத்தொழிலில் உன்னத பதவியடைந்ததும் அதற்குத் தேடியவுபாயங்களும் நமக்குத்தெரிந்ததே. அவ்வுபாயங்களை நாமும் பின்பற்ற நம் அதிகாரிகள் இடங்

கொடுக்கவில்லை. கடைசியாக இவ்வுபாயங்களையே இரண்டுவருஷகாலமாக வேலை செய்த கமிஷன் வெளியிட்டிருக்கிறது. இனி இவைகளை ஆதரித்து காரியங்கள் நடை பெற வெகுகாலம் ஆகும் என்பது அதிகாரிகளின் நோக்கங்களையும் வழக்கங்களையும் பலகால அனுபவத்துடன் அறிந்த நமக்கு புதிதல்ல.

கனவோ நினைவோ!

(Y. மகாலிங்க சாஸ்திரி, B.A., B.L.,)

நான் கண்டது கனவோ நினைவோ,—எனக்குச் சொல்ல முடியாது. அது ஆச்சரியமானதும், கம்பீரமான பாவங்களடங்கியதுமான ஒரு அனுபவம். அருணோதயம் இன்னும் ஆகவில்லை. திக்குக்கள் இருட்பிரிந்து கொஞ்சம் கொஞ்சமாய்த் தெளியுந்தருணம். வனம் முழுவதும் ஸந்தோஷக் களை பரவிற்று. பக்ஷிகள் உல்லாஸத்தினால் சப்தித்துக்கொண்டு பரபரப்புடன் மரத்துக்கு மரம் பறந்து விளையாடின. தற்போது மலரும் தாமரையோடைகளிலிருந்து கம கமவென்று மந்தமாருதம் வீசிற்று. ஹிம்ஸிக்கும் சுபாவமில்லாத ஸாது மிருகங்கள் நிர்பயமாய் வெளியே சஞ்சரித்தன.

"ஜோ" வென்று பிரவாஹிக்கும் மலையருவியின் வெள்ளத்தை வன கஜங்கள் மேல் நீட்டிய துதிக்கைகளால் போதுமானமட்டும் எடுத்து அருந்தின. பிரஸன்னமான அக்காலமே பிரவாஹ ரூபமாய் பரிணமித்ததுபோல் தமஸா நதியானது அவ்வனத்தின் நடுவே ஊர்ந்தோடியது. அவ்வனத்தில் தோன்றிய சாந்திரஸமே இறுகி முதிர்ந்து உதிர்ந்ததோவென்று நினைக்கும்படியாக நதியில் உதயகால அனுஷ்டானங்களைச் செய்துகொண்டு வால்மீகி மகரிஷி காணப்பட்டார். அப்போது தியானத்தினால் அசைவற்று நிற்கும் இவருடைய செவிகளில் அமிர்தம் பொழிந்ததுபோல் ஜில்லென்றொரு த்வனி விழுந்தது. வால்மீகியின் மனம் சலித்தது. 'இதென்ன; மாந்துளிரை உண்டு களித்துக்கூவும் குயிலின் குரலோ! மலரும் புஷ்பங்களின் தேனையருந்தி மகிழ்ந்து பாடும் வண்டுகளின் இசையோ! அல்லது அவ்வருணோதய காலத்தில் கல்மஷமற்று விளங்கும் என் மனத்தின் ஸமாதி நிலையிலிருந்து உதிக்கின்ற நாதப்பிரும்மத்தின் பிரத்யக்ஷமோ? அக்ஷரபத்தமான கானம்போல் தோற்றுகிறதே, என்று ஆச்சரியத்துடன் மகரிஷி கண்ணைத்திறந்து வானத்தை நோக்கினார். அப்போது சிவுடனோ மாதவுடனோ கமலபவுடனோ பரப்ரஹ்மனோ—எவரினி நிர்ணயிஞ்சிரிரா என்று மெய்மறந்து பாடிக்கொண்டு ஆனந்தக்கடலில் மிதந்துவரும் வீணைமுனியான நாரதரைக்கண்ணுற்றார். அவர் பிரம்ம தேஜஸ்ஸினால் தென்திசையிலிருந்து திக்கும் மற்றொரு சூர்யனையொத்து விளங்கினார். வால்மீகி காதைக்கொடுத்தபடியே கானரஸத்தில் ஈடுபட்டுப் பரவசமாகி நின்றார். அவர் மனம் தனக்குள்ளடங்காமல் தெளும்பிற்று. அவர் சரீரம் மயிர்க்கூச்சலடைந்தது. கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியது. இதென்ன பிராகிருதபாஷையிலியற்றப்பட்ட கீதமாயிருக்கிறதே. நான் இதுவரையில் அனுபவித்தறியாத பக்திபாரவச்யத்தை இது எனக்குப் புகட்டி வைக்கிறதே! என்ன ராகத்தின் உருக்கம். இந்த கீதத்தின் மகிமையால் நிஜமாகவே இந்தராகம் தேவாமிர்த வர்ஷிணியாக ஆகிவிட்டது. என்ன அர்த்தத்தின் காம்பீர்யம். இந்த கீதத்தின் ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் ஸ்ரீராமன் ஆயிரம் ஜென்மமெடுத்து அடிமை யானாலும் தீராது போலிருக்கிறதே! ஆஹா! என்ன ஆனந்தம்!

இப்படி மெய் மறந்து மகிழும் வால்மீகியின் மேல் அப்படியே மெய் மறந்து பாடிக்கொண்டு வானத்தில் சஞ்சரிக்கும் நாரதரது உத்தரீய கிருஷ்ணாஜினம் எதிர்ச்சயாய் நழுவி விழுந்தது.

நாரதர் திடீரென்று விழித்துக்கொண்டு கீழே பார்த்தார். கிருஷ்ணாஜினம் ஜலத்தில் நிற்கும் வால்மீகியின் கையில் அகப்பட்டுக்கொண்டது.

"வால்மீகியா?"

"ஸத்குருவே, ஆம்."

"நல்லவேளை நீர் தாங்கிக்கொண்டதால் கிருஷ்ணாஜினம் நனையவில்லை." நாரதர்கீழே இறங்கி வந்தார்.

வால்மீகி: "ஸ்வாமி, தங்கள் தர்சனத்தால் இன்றையதினம் எனக்கு ஸுதினமாயிற்று. தாங்கள் இப்போது பாடிக்கொண்டு வந்த திவ்ய கீதம் எந்த பக்த சிகாமணி இயற்றியது. எந்த மகானின் வாக்கிலிருந்து தன் வீணையுடன் ஸரஸ்வதி பூர்ணாவதாரமாக ஆவிர்ப்பவித்தனள்! எவன் பிறப்பால் பிரம்மலோகத்திற்குக் கிடைக்காத பாக்கியத்தை பூதேவி அடைந்திருக்கிறாள். என்மேல் கருணைசெய்து அவனை எனக்குக் கூறுவீர்."

நாரதர்: (சிரித்துக்கொண்டு) ராமாயண மகாகவியான உங்களுக்கு இப்பிராகிருத கீதத்தை இயற்றினவன் யாராயிருந்தாலென்ன?

வால்மீகி: ஸத்குருவே, ஏதோ தங்கள் உபதேச பலத்தால் என் வாக்கிலிருந்து உதித்த ஸரஸ்வதியை ராமாயணம் என்று சொல்லுகிறார்களே யொழிய அதை இயற்றியதாக நான் அகங்காரப்படவில்லை. தயாநிதியான நீங்கள் என்னை இப்படிப் பரீக்ஷிக்கலாமா? தாங்கள் உள்ளம் பூரித்துப் பாடின இசைச்சுவையால் அதைப்பற்றி நான் தெரிந்துகொள்ள அவாக்கொண்டேன். இப்புவியில் அடிக்கடி ஜீவராசிகளை உத்தாரணம் செய்யும் பொருட்டு மஹான்கள் உதிப்பது வழக்கந்தானே. அப்படி யாராவது தற்சமயம் தோன்றியிருக்கிறார்களாவென்று அறியவேண்டி நான் தங்களைப் பிரார்த்தித்தேன்.

நாரதர்: அவரைப்பற்றி நீர் இதுவரையில் தெரிந்துகொள்ளாதது ஆச்சரியமாயிருக்கிறது. கொஞ்சநாளாய் கந்தர்வ யக்ஷ கின்னர அப்ஸரோ கணங்கள் தேவலோகத்தை வெறுத்து இப்புவியில் பஞ்சநதக்ஷேத்ரத்தில் வஸிக்கும் தியாகராஜன் என்ற பக்தனுடைய கிருஹத்தில் ஸந்நிஹிதர்களாக விருக்கிறார்களென்று நீர் கேள்விப்படவில்லையா?

வால்மீகி: உண்மையில் எனக்குத் தெரியாது. தாங்கள்கூட அவருடைய கீதங்களை இப்படி ஒலாகித்துப்பாடும்படியான பாக்யத்தை எந்த பக்தன் பெற்றது, எந்த ஸத்குருவின் அனுக்கிரஹத்தாலோ? ஆனால் இது கேட்காமலே விளங்கும். லோககுருவான தங்கள் அனுக்கிரஹமே மோக்ஷ சாதனமான இத்தகைய ச்ரேயஸ்ஸுக்கு காரணமாகிறது என்பதற்கு நானே முதல் உதாரணம்.

நாரதர்: வால்மீகி, என் உபதேசம் எவ்வளவு மாத்திரம். அவரவர்களின் மனதின் பரிபாகத்தால் அவரவர் உபதேச பலத்தை அடைகிறார்கள். மஹாவிஷ்ணுவைக்கூட நான்தான் ராம விக்ரஹத்துடன் ஸ்ரீ தியாகராஜன் நினைத்தபோதெல்லாம் பிரத்யக்ஷமாகும்படி கட்டளையிட்டேன்.

வால்மீகி: ஸ்வாமி, ஸத்துக்களின் சரித்திரத்தில் எனக்கிருக்கும் குதூஹலமானது என்னைத் தூண்டுகிறது. அப்படி ஸ்ரீராமன் அருளிய ஸத்தர்ப்பங்களை நான் செவியாறக்கேட்டு என்னைப் பரிசுத்தனாக்கிக்கொள்ள விரும்புகிறேன்.

நாரதர்: நினைக்கும் போதே என் சரீரம் மயிர் கூச்சல் அடைகிறது. ஒரு சமயம் காட்டின் வழியாக அந்த பக்தன் சிஷ்யர்களால் சுமக்கப்பட்ட பல்லக்கில் வந்து கொண்டிருக்கும் பொழுது, அவரைத்திருடர்கள் வளைத்துக்கொண்டு கவண்டிக்கல்கள் எறிந்து உபத்ரவப்படுத்தினார்கள். சிஷ

யர்கள் ஒன்றும் தோன்றாமல் நாம் என்ன செய்வோம், இந்த ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டு விட்டோமே என்று பதைத்தார்கள். அப்பொழுது ஸ்ரீதியாகராஜர் ஸ்ரீராமனை உத்தேசித்து "முந்து வெநக இரு பக்கல தோடே முரஹர ராரா ராம." —என்று பிரார்த்தித்தார். உடனே ஸ்ரீராமன் லக்ஷ்மண சகிதராய் சிபாய்வேஷத்துடன் ஆவிர்பவித்து ப்பல்லக்கின் இருபக்கத்திலிருந்தும் திருடர்களின் மேல் அம்புகள் எய்து அவர்களை வெருட்டினார். இதுபோல் பலசமயங்களில் பகவான் ஸ்ரீ தியாகராஜனுக்கு அருளியிருக்கிறார்.

வால்மீகி: ஸத்குருவே, அந்த மஹானை நான் உடனே பார்க்க வேண்டும்.

நாரதர் சரி யென்றார்.

ஸ்ரீ தியாகராஜஸ்வாமி ராமவிக்ரஹத்தின் முன்னிலையில் கையில் வீணை ஏந்தி ஆத்மானுபவத்துடன் பாடிக்கொண்டிருந்தார். சங்கீதஸுதாரஸம் அவ்வீடு நிரம்பித் தெளும்பிக் காதுக்கு எட்டின தூரம் வெள்ளமாய் பெருகியது. இந்த ஸங்கீதத்தையவர் எப்போது ஆரம்பித்தாரென்றும் எப்பொழுது முடிக்கப் போகிறாரென்றும் அறியக் கூடாத விஷயமாக விருந்தது. சர்ம சக்ஷுஸ்ஸுக்கு எதிரில் நான்கு சிஷ்யர்கள் தான் தென்பட்டார்கள். ஆனால் வீணாவேணு மிருதங்கங்களுடன் கந்தர்வர்களும் அப்ஸரஸ்திரீகளும் மறைந்திருந்து தியாகராஜஸ்வாமியை அனுசரித்து கானம் செய்துகொண்டிருந்தார்கள். தேவர்கள் சரீரத்தை மட்டும் போஷிக்கும் அமிர்தத்தை துச்சம் செய்துவிட்டு ஆத்மாவைப் போஷிக்கும் ஸ்வாமியின் கானாமிர்தத்தை வேண்டி வந்தார்கள் போலும். இந்திர ஸதஸ்ஸில் சிருங்காரப் பிரதானமான ஸங்கீதப்பிரஸங்கங்கள் நடப்பதுண்டு. ஆனால் அத்தகைய கானம் மதுர ரஸத்தை அறியவேண்டிக் கள்ளைக் குடித்தால் எப்படியோ அப்படியே. சற்று ருசியைக்கொடுத்துவிட்டுப் பிறகு மனத்தை மயக்கி ராஜஸவிர்த்தியுடையதாகச் செய்துவிடும்.

கல்கண்டு சேர்த்து இறுகக்காய்ச்சின பாலைப் போன்று ஸ்ரீ தியாகராஜனுடைய கீதம் மனதை ஸத்வ நிலையில் நிறுத்த வல்லது. அவருக்கு ஸ்ரீராமனிடத்திருக்கும் பக்தியே கீதரூபமாய் பரிணமித்ததேயொழிய, அவர் ஸங்கல்பத்துடன் ரசனைகள் செய்யவில்லை. தேவராஜ ஸுவாமிக்கு ஈச்வரனை திருப்திசெய்து வைக்கும் விஷயத்தில் கானமே தபஸ்ஸாகவும் யோகமாகவும் இருந்தது.

ஸ்வாமிகள் அப்போது சந்நிதியில் க்ஷீரத்தை வைத்து 'பால் ஆரகிம்பவே' என்றுபாடி அதை ஸ்ரீராமனை அருந்தும்படி பிரார்த்தித்தார். தற்சமயம் பிரவேசித்த நாரதரும் வால்மீகியும் ஸ்ரீராமன் மறைந்திருந்து அந்தபாலை ஆதரவுடன் அருந்துவதைக் கண்டு ஆச்சரியமுற்று தியாகராஜஸ்வாமிக்கு முன் பிரத்யக்ஷமாகி அவரைக் கொண்டாடினார்கள். ஸ்வாமிகளுக்கு இவர்களின் திவ்ய விஜயத்தால் அடங்கா மகிழ்ச்சி யுண்டாகி 'தினமே ஸுதினம்' என்றும், "ஸ்ரீநாரத நாதஸரஸிருகப்ருங்க" என்றும் பாடினார். பிறகு வால்மீகி இயற்றிய ஸ்ரீராமாயணத்தின் மஹிமையைப் புகழ்ந்துகொண்டு மத்யமாவதியில் "ராம கதா ஸுதா பாநமோக ராஜ்யமு ஜேஸுனே காமபந்த ஜ்வலநாப்திநாவமே கலிஹரமே" என்று பாடினான். மகரிஷிகள் மேல்மேலும் தன் கானத்தைக் கேட்க ஆவலுடனிருப்பதைக்கண்டு "ராமபக்தி ஸாம்ராஜ்யம்" என்று தன்னுடைய பக்திரஸானுபவத்தை கீதரூபமாய்த் தெரிவித்தார்.

வால்மீகி ஆனந்தத்தினால் பரவசமடைந்து ஸ்வாமிகளைப்பார்த்து—'ஏ பக்தா, நான் தசரதபுத்ரனை ராமனை யறிந்தேனே யொழிய ராம பிரும்மத்தை இதுவரையில் அறியவில்லை' என்றார்.

இந்தஸ்துதியை தியாகராஜன் கேட்க வெட்கித் தலைகுனிந்து, 'ஸ்வாமி, ஈச்வரன் வேதங்களை இயற்றினதுபோலும், பகீரதன் பூலோகத்தில் கங்கையைப் பிரவாஹிக்கச் செய்ததுபோலும், ஸகல பிராணிகளின் க்ஷேமத்திற்காகப் பரமபாவனமான ராமாயணத்தை இயற்றிய ஆதிகவியான தங்கள் மகிமை எங்கே. அல்பனான என் ஞான மெங்கே. தங்கள் ஸ்துதியினால் குற்றஞ்செய்ததுபோல் என் ஆத்மா நடுங்குகிறது, என்று வினயத்துடன் தெரிவித்தார்.

அப்போது நாரதர்: 'தியாகராஜரே, ராமனை தசரத புத்ரனாயறிந்து ராவண யுத்தத்தை வர்ணித்த வால்மீகியும் நீர்தான். பிறகு த்யானமகிமையால் அவரையே பிரும்மமென்று அறிந்தவரும் நீரே. நீர்தான் விசேஷமான வால்மீகியின் இரண்டாவது அவதாரம்' என்றார். தியாகராஜர் நிமிர்ந்துபார்த்தார்.

மகரிஷிகள் மறைந்து விட்டாகள்.

இது என்ன கனவோ நினைவோ என்று அவர் ஆச்சரியப்பட்டார்.

இது கனவோ நினைவோ யானும் அறிகிலேன்!

புயற்காற்று

(ஸ்ரீமான் V. நாராயணையர் M. A. M. L. எழுதியது)

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நத பாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பிவரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய, அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும், வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு, உறவினர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய, கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அந்நதபாபுவை வேண்டியதும் சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை)

அதிகாரம் 15.

இராமேசன் திரும்ப வருவதை எதிர்பார்த்தவராய் உட்கார்ந்திருந்தார் அந்நத பாபு. வரும்பொழுதே, இராமேசன் "விருந்தாளிகளின் ஜாபிதாவைக்கொடுத்தால் கல்லியாண நாளை மாற்றி வைத்திருக்கிறது என்று இன்றே எழுதிவிடுகிறேன்" என்று சொல்லவே;

"ஆனால் கல்லியாணத்தை ஒதுக்கி வைப்பது என்று நிச்சயமாய் தீர்மானித்தாய்விட்டதா" என்றார் அந்நதபாபு.

"ஆமாம், வேறு வழியில்லை."

"இதோ பார், நான் சொல்வதை சற்று கேள்" என்று அந்நத பாபு கடினமாய் "இது விஷயமாய் நான் ஒன்றுக்கும் ஜவாப்தாரி ஆகமாட்டேன். நீதான் எல்லா விஷயங்களுக்கும் ஏற்பாடுகள் செய்யவேணும். ஊரார் சிரிப்புக்கும் பேச்சுக்கும் இடமாக எனக்கு இஷ்டமில்லை. கல்லியாண வி

ஷயத்தை சிறுபிள்ளை விளையாட்டாக நினைத்து நடத்த உனக்கு இஷ்டமானால் என்போன்ற வயோதிகர் அதற்கு உடன்படலாமோ? இந்தா, இதோ இருக்கிறது, அழைப்புக்காகிதம் எழுதி அனுப்பப்பட்ட விருந்தாளிகளின் ஜாபிதா. இது வரை கல்யாண ஏற்பாடுகளிலே அதிகப்பணம் செலவாகி இருக்கிறது. அதில் எவ்வளவு வீணாய் விடும். இப்படி பணத்தை வாரி இறைக்க என்னால் முடியாது."

எல்லா ஏற்பாடுகளையும் தானே செய்து இதனால் ஏற்படும் அதிகச்செலவை எல்லாம் தானே பொறுத்துக்கொள்வதாக உடன்பட்டான் இராமேசன். "சரி" என்று சொல்லிவிட்டு எழும்போது அந்நத பாபு:

"கல்யாணமானபின்பு எங்கே வக்கீலாய் அமருவது என்று தீர்மானித்தாயோ, இராமேசா? அல்லது கல்கத்தாவிலேயே இருக்கப்போகிறாயோ?"

"இல்லை, இல்லை; வேறு உள்நாட்டிலே ஒரு நல்ல ஊரைப்பார்த்துத் தீர்மானிப்பதாய் உத்தேசம்."

அந்நத பாபு: "உள் நாட்டிலேயே? அது சரியான யோசனை. இடாவா என்ற ஊர் நல்ல ஊர். அந்த ஊர் வயிறு நோவுக்காரருக்கும் அநுகூலமாயிருக்குமாம். அங்கே போய் ஒருமாதம் வரை இருந்திருக்கிறேன். அங்கே போனால், இங்கேவிட இரண்டுபங்கு அதிகம் என்னால் சாப்பிட முடியும். இவளோ, எனக்கு ஒரே பெண். அவளும் நானும் ஏன் பிரிந்திருக்கவேண்டும். பிரிந்தால் இருவருக்கும் சுகமிராது; ஆகையால்தான் நீ நல்ல ஊராய் பார்த்துத் தீர்மானிக்கவேண்டுமென்று எனக்கு ஆசை."

இராமேசன "இவர் மனதிற்கு விரோதமாய் நடநது புண்படுத்திவிட்டோமா" என்று வருந்தும் சமயம் பார்த்து தனக்கு அநுகூலமான சில விஷயங்களைக்கேட்டு வாங்கிக்கொள்ள முன் வந்தார் அந்நத பாபு. இப்போதிருக்கிற மனோநிலையில் இராமேசனை "சேரபுஞ்சி" அல்லது "கரோ" மலைப்பிரதேசத்திற்கோ அல்லது பனிபெய்துமூடும் வேறு எந்த மலைக்கொம்புக்கோ போய் அங்கேயே வசிக்க உடன்படவேண்டும் என்று அந்நத பாபு கேட்டாலுங்கூட அதற்கு அவன் உடன்படுவான் அல்லவா!

"சரி, அப்படியே ஆகட்டும்; 'இடாவா' விலேயே வக்கீலாய் அமர்கிறேன்" என்றான இராமேசன். இப்படியாக, கல்யாணத்தை ஒதுக்கிவைத்திருப்பதைப் பற்றி எல்லோருக்கும் எழுத உத்திரவு பெற்றுக்கொண்டு இராமேசன் தன வீட்டிற்குப் போன தத்க்ஷணமே, அக்ஷயன் அந்நதபாபுவின் வீட்டிற்கு வந்தான். கல்யாணத்தை ஒருவாரம் ஒதுக்கி வைத்திருக்கிறது என்று கேட்டதும்,

அக்ஷயன்: "வாஸ்தமாகவா? இதென்ன இது! நாளை மறுநாள் அல்லவோ கல்யாணம், இப்போது எப்படி அதை ஒதுக்குவது?" அந்நத பாபு: "சாதாரணமாய் முடியாதுதான்; ஆனால் இந்தக்காலத்துப் பிள்ளைகளோ எதையும் சட்டை செய்வதில்லை. தங்கள் இஷ்டப்படியெல்லாம் செய்து விடுகிறார்கள்."

அக்ஷயன் ஏதோ பிரமாதமான யோசனையில் ஆழ்ந்திருப்பவன்போல் சற்று நிதானித்து பிறகு மெதுவாய்,

"ஹேமநளினிக்கு நல்ல கணவன் கிடைத்து விட்டான் என்று நினைத்து முன்பின் ஒன்றையும் யோசியாது இருக்கிறீர். பெண்ணை வளர்த்து அவள் வாழ்நாள் முழுவதையும் ஒருவன் கையில் ஒப்புவிக்கும்போது அவனைப்பற்றி தீர விசாரிக்க வேண்டும். தேவலோகத்திலிருந்து வந்தவனானாலும், அஜாக்கிரதையாய் விசாரிக்காமல் நடத்தக் கூடாது" என்றான்.

அந்நதபாபு: "இராமேசனைப் போன்ற பையனையும் சந்தேகிப்பதானால் சந்தேகிக்கக்கூடாதவரே உலகத்திலே இல்லை!"

அக்ஷயன் "இப்படி திடீரென கல்யாணத்தை ஒதுக்கி வைப்பதற்கு ஏதாவது காரணம் சொன்னானோ உங்களிடம்?"

அந்நதபாபு: (தலையைச் சொரிந்து கொண்டே) "இல்லை, காரணம் ஒன்றும் என்னிடம் சொல்லவில்லை. ஏதோ முக்கியமான அவசரகாரியம் என்று மட்டும் சொன்னான்." தன்னுடைய முகக்குறிப்பை அந்நதபாபு பாராதவண்ணம் முகத்தை மறைத்துக்கொண்டு அக்ஷயன் "உம்முடைய மகளிடமாவது சொல்லி யிருப்பான் என்று நினைக்கிறேன்" என்றான்.

அந்நதபாபு: "இருக்கலாம்."

அக்ஷயன்: "அப்படிச் சொல்லி யிருக்கிறான் என்று அறிந்து கொள்ளவேண்டாமா?"

"ஆமாம்" என்று, ஹேமநளினியைக் கூவி அழைத்தார். அவள் அங்கே வந்ததும் யார் வந்திருக்கிறார் என்று அறிந்தவளாய், அக்ஷயன் தன் முகத்தைக் காணமுடியாதபடி தன் தகப்பனாருக்குப் பின்புறமாய் வந்து நின்றாள்.

"கல்யாணத்தை ஒதுக்கிவைப்பதற்குக் காரணத்தை உன்னிடம் சொன்னானோ இராமேசன்?" என்று அந்நதபாபு கேட்டதற்கு "இல்லை" என்று தலையை அசைத்தாள் ஹேமநளினி. அந்நதபாபு: "என்ன காரணம் என்று நீ கேட்கவில்லையா?"

ஹேமநளினி: "இல்லை"

அந்நதபாபு: "இதென்ன, இப்படியும் கேட்டதுண்டா? ஒருவருக்கொருவர் சரியான ஜதை நீங்கள்! அவன் வந்து திடீரென, 'கல்யாணம் செய்துகொள்ள இப்போது எனக்கு ஒழியவில்லை' என்று சொல்லுமுன், 'சரி, அதற்கென்ன பின்னொருநாள் கல்யாணம் செய்து கொள்வோமே' என்று சொல்லிச் சம்மதிப்பாளோ ஒருத்தி?"

அக்ஷயன் ஹேமநளினியின் கக்ஷியாய் பேசுபவன்போல் "ஒருவன் காரணத்தைக் கேட்கக்கூடாது என்று ஸ்பஷ்டமாய் தெரிவித்தால், பின்பு தூண்டித்தூண்டி யார் கேட்பார்கள். வெளியிடக்கூடிய காரணமாயிருந்தால் இராமேசன் தானாகவே சொல்லமாட்டானோ?"

ஹேமநளினிக்குக் கோபத்தால் முகம் சிவந்தது. "இதைப்பற்றி மூன்றாம் மனுஷ்யரின் அபிப்பிராயங்களை ஒருவரும் கேட்கவில்லையே! நடந்த விஷயத்தைபபற்றி யாருக்கு அதிருப்தி நான் சம்மதித்த பின்பு" என்று சொல்லிவிட்டு அவ்வறையினின்றும் விரைந்து சென்றாள் ஹேமநளினி. அக்ஷயன் முகம் பசேல் என்று கருத்தது. ஆனாலும் புன்சிரிப்பை மேற்கொண்டவனாய்,

"உலக வழக்கமே இப்படித்தான், சிநேகிதன் என்று ஏதாவது உபகாரம் செய்ய ஆரம்பித்தால் வசவுதான் பலன். உண்மை நட்பு எவ்வளவு சிலாக்கியமான தென்றும் இதினின்றும் விளங்குகின்றதல்லவா? இராமேசனைப் பற்றி எனக்கு உண்டான சந்தேகங்களைத் தெரிவிக்கவேண்டியது உங்களுடைய நண்பனாகிய என் கடமை என்றே, நீங்கள் எவ்வளவு கோபித்துக்கொண்டு வைது என்னிடம் அருவருப்பு அடைந்தபோதிலும் நான் சும்மா இருக்க முடியாது. உங்களைக் கஷ்டங்கள் சூழ்க்கும்போது நான் பேசாமல் வாயை மூடிக்கொண்டு இருக்கலாமா? எச்சரிக்கை செய்யவேண்டாமா? இப்படிச் செய்வது என்னுடைய சுபாவம்; அது கெட்ட சுபாவமென்று நீங்கள் வேண்டுமானால் நினைத்துக் கொள்ளுங்கள். எதற்கும், நாளையதினம் யோகேந்திரன் இங்கே வருவான். அவனும் இந்தக்கதை முழுவதையும் கேட்டபின்பு தன் சகோதரியின் விஷய

மாய் கவலையற்றிருப்பானானல் நான் வாயை மூடிக்கொண்டு இருந்துவிடுகிறேன்."

இந்த சமயத்தில் தான் இராமேசன் நடத்தையின் தாத்பரியம் என்ன என்று அக்ஷயனைக் கேட்டறிந்து கொள்வதற்கு ஏற்ற சமயம் என்று அந்நத பாபுவுக்கு நன்கு புலப்பட்டதெனினும், இரகசியங்களை புகுந்தறிய விரும்புவோன் பெருங்காற்றைக் கிளப்பியது போலாகும் என்று பயந்து சும்மா இருந்து விட்டார்.

ஆனாலும் தன் மனவருத்தத்தால், "சீ! சீ! அக்ஷயா! நீ ஆனாலும் அதிக சந்தேகி. ருசு ஒன்றும் இல்லாதபோது நீ ஏன்—"

அக்ஷயன் எவ்வளவோ அடக்கமாய் நடந்து கொள்பவனாயினும் இப்படி ஓயாமல் தன்னை அலக்ஷியம் செய்து பேசுவதை அவனால் சகிக்க முடியவில்லை. ஆகவே, ஆத்திரத்துடன் "இந்தாரும், அந்நதபாபு, நான் என்ன என்னவோ கெட்ட எண்ணங்கள்கொண்டிருப்பதாகவல்லவா சந்தேகிக்கிறீர்கள். ஏதோ உங்களுக்கு வரப்போகிற மாப்பிள்ளையின் மீது வீண்புகார் சொல்வதாகவும் அவர் சற்றும் களங்கமற்றவர் என்றும் நினைக்கிறீர் அல்லவா? பெண்மக்களுக்கு தத்துவசாஸ்திரம் சொல்லிக்கொடுக்க எனக்குத் தெரியாது, வாஸ்தவந்தான்; அவர்களோடு கவிகளைப் படித்து ரஸிக்கவும் தெரியாது. நான் சுத்த சாதாரண ஆசாமிதான்; ஆனாலும் உம்மிடத்தும் உங்கள் குடும்பத்தாரிடத்தும் எனக்கு அதிக பிரியமும் நட்பும் உண்டாயிருக்கிறது. வேறு எல்லாவிஷயங்களிலும் நான் இராமேசனுக்குச் சளைத்தவன் ஆனாலும் உங்களிடமிருந்து மறைத்து வைக்கவேண்டியது ஒன்றும் எனக்கு இல்லை என்பதை நான் பெருமையாய் சொல்லிக் கொள்ளலாம். என் கந்தலையெல்லாம் உங்களிடம் காட்டி காலணா பிச்சை கேட்டாலும் கேட்பேனே யொழிய போலிவேஷம் தரித்து உங்கள் வீட்டைக் கொள்ளையடிக்கமாட்டேன். காளையதினம் விளங்கும் உங்களுக்கு இதன் உண்மை."

அதிகாரம் 16.

எல்லாக்காகிதங்களையும் எழுதி அனுப்புமுன் இரவில் வெகுநேரமாயிற்று; பிறகு இராமேசன் படுக்கையில் படுத்துக்கொண்டும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் எண்ணங்கள் இரண்டு கிளைகளாய் பிரிந்து அவன்மனதில் ஓடின. ஒன்று சுத்த கங்கை போன்று தெளிந்தும், மற்றது யமுனைபோல் கருத்தும் இருந்ததால், பிரயாகையில் அவை கலந்து விளங்குவது போலிருந்தது அவன் மனது; சற்று நேரம் படுக்கையில் அப்புறமும் இப்புறமுமாய் புரண்ட பிறகு திடீரென அவன் போர்வையை வீசி யெறிந்து எழுந்திருந்தான்.

ஜன்னலண்டை போய் வெளியே பார்த்தான். தெருவின் ஒரு புறத்து வீடுகள் இருட்டில் மறைந்திருப்பதையும் எதிர்புறத்தில் வீடுகள் எல்லாம் வெண்ணிலவில் விகசித்து விளங்குவதையும் கண்டான். அப்படியே மௌனமாய் எண்ணங்களில் ஆழ்ந்து சற்று நேரம் நின்றான். மனக்கிலேசம், சந்தேகம் ஓயாத கவலை, இவைகளையெல்லாம் கடந்து அவனுடைய அந்தரங்க ஆத்மாவானது அநாதியாய் சாசுவதமாய் அமைதியாய் எல்லாவற்றையும் வியாபித்து விளங்கும் கரையற்ற பிரபஞ்ச சாகரத்தில் மிதப்பது போலிருந்தது அப்போது இராமேசனுக்கு.

அப்போது அவன் மனதின்முன் தோன்றிய காக்ஷியில், பிறப்பும் இறப்பும் வேலையும் ஓய்வும் துவக்கமும் இறுதியும் ஆகிய எல்லாம் திரையிட்டு மறைத்ததுபோல் தோன்றும். அவ்யக்தமான அநாதிப்பிரதேசத்தினின்றும் இவ்வுலகின்கண் மறக்க வொண்ணாத திவ்விய கானத்தின் ஒலியலைகள் போன்று சதா ஓயாமல் வெளிப்போந்து உலவா நின்றன. இருள் ஒளி இரண்டுமற்ற அதே அநாதிப்பிரதேசத்தினின்றும் ஸ்திரீ புருஷர்களின் காதல்கள் இணையற்ற உருவங்கொண்டு தாரகைகளின் இன்னொளியில் இவ்வுலகின்கண் வருவதையும் கண்ணுற்றான் இராமேசன்.

மெதுவாய் இராமேசன் மாடத்தின் மீது ஏறினான். அவனுடைய கண்கள் அந்நதபாபுவின் வீட்டுப்புறமாய் திரும்பின. எங்கும் நிச்சப்தமாய் இருந்தது. வீட்டுச்சுவர்மேலும் கதவுகள் ஜன்னல்கள் இருக்குமிடத்தும் மாடத்தின் தளத்திலும் எங்கும் நிலவொளி நிழலுடன் கலந்து சித்திரவேலை செய்த வெண்கலை விரித்ததுபோலிருந்தது. என்ன அதிசயம்.——ஜனநெருக்கமுள்ள இப்பெரு நகரிலே, சர்வ சாதாரணமான இந்தச் சிறு வீட்டிலே பள்ளியில் படிக்கும் பெண்ணை சாதாரண வேஷம் தாங்கி அதிசய இன்பம் ஒன்று குடியிருக்கின்றது பார்.

இந்தப் பெரிய நகரத்தில் இராமேசன்போல் வக்கீல்களும் பரீக்ஷையில் தேர்ந்தவர்களும், வெளியூரிலிருந்து வந்தவர்களும் உள்ளூர்க்காரருமாய் எத்தனை ஜனங்கள் குவிந்து கூடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் விட்டு தன்னைமட்டும் இவ்வித விசேஷமான சுகாநுபவத்திற்கென்று தெய்வம் பொருக்கியெடுத்த காரணம் ஏதோ? சரத்காலத்து சாயங்கால வெயிலில் ஜன்னலண்டையில் இவ்வின்பப்பெண்ணுடன் தனித்து நின்று அளவிலா ஆனந்த சாகரத்தில் சகல சிருஷ்டியும் மிதந்து இன்புறுவதான காக்ஷியை மனதில் காணும் படியான பாக்கியம் மற்றவர்களுக்கு இல்லாமல் தனக்கு மட்டும் கிடைத்ததே! என்ன ஆச்சரியம்! தன்னுள் உறையும் ஜீவஸ்வரூபத்தை உருவறியவொட்டாத ஆனந்தமயமாக மாற்றிய அதிசய சக்தி அதற்கேற்ப தன்னைச் சூழ்ந்திருந்த உலகையுமே இன்பவடிவமாய் மாற்றிவிட்டதே!

இரவில் வெகு நேரம்வரை மாடத்தில் மேலுங் கீழுமாய் உலாவிக்கொண்டிருந்தான் இராமேசன். அஸ்தமிக்கின்ற சந்திரன் எதிர்வீட்டின் பின் மறைந்தது. ஆகாய மண்டலத்தை விட்டுப் பிரியுமுன் கடைசியாய் ஒரு முறை தழுவி நிற்பது போல் சற்றுத் தயங்கி பின்பு வெண்ணிலவு மங்கவே இருள் யெங்கும் சூழப் பரவிற்று.

இராமேசனின் உடல் குளிர்ந்து சற்று நடுங்கிற்று. திடீரென்று திகிலடைந்த அவன் மனம் குழம்பிற்று. காலையில் உயிர் உய்ய மறுபடி உலகத்தோடு போராடவேண்டுமே! முகமண்டலம்போல் விளங்குகின்ற ஆகாய மண்டலத்தில் கவலையின் அறிகுறி ஒன்றும் காணப்படவில்லை. நிலவின் சாந்தமான அமைதி ஓயாமல் உழைக்கும் உலகால் கலக்கப்படவில்லை. இரவு நிச்சப்தமாய் சாந்தமடைந்திருந்ததை ஒன்றும் கலங்கச் செய்யவில்லை. ஓயாது சலிக்கும் எண்ணற்ற தாரகை கணங்களுடன் விளங்கிய பிரபஞ்ச தோற்றம் அழிவிலா அமைதியிலே ஆழ்ந்தது போலவேயே காணப்பட்டது. மனிதனின் ஓயாத முயற்சிகளுக்கு மட்டுமே அவதி ஒன்றும் இல்லைபோலும். சுகப்படும்போதும் துக்கப்படும்போதுமே ஒன்றுபோல ஓயாமல் போரிட்டு உழைக்கவேண்டியவன் போலும் மனிதன் மட்டும்.

அநாதி மண்டலத்தின் அமைதி இப்படி ஒரு புறம் விளங்க உலகம் ஓயாமல் இப்படி தத்தளிப்பது மற்றொரு புறம் விளங்கிற்று. இவ்விரண்டும் எப்படி ஒருங்கே இருக்கக்கூடும்? தன் கவலைகளாலும் சங்கடங்களாலும். பீடிக்கப்பட்ட இராமேசன் இவ்வாறு உணரமுடியாத இந்த தத்துவத்தைப்பற்றி வெகுநேரம் சிந்தித்து நின்றான்.

அநாதியாய் அளவற்றதான சாந்தியை யடைந்த சிருஷ்டிக் கருப்பத்திலே, காதலின் மெய்யுருவத்தை சற்றுமுன் கண்டுகளித்த இராமேசன், அதே காதல், இப்பொழுது, உலகத்து சண்டை சச்சரவுகளில் மிதிபுண்டு தாக்குண்டு புரண்டு உருமாறுவதைக் காணவே, எது உண்மைத் தோற்றம் எது மதிமயக்கத்தால் வரும் போலித்தோற்றம் என்ற சந்தேகம் உண்டாயிற்று.

துப்பறியும் நாவல்கள்.

சுந்தர் சிங்

அல்லது பாஸ்கர விலாஸ்

படுகொலை   ரூ 1-12

சிவ குமாரன்

அல்லது கொலைஞன் யார்? ரூ 1-0

ஞானம்பாள்

அல்லது கள்வர் கவர்ந்த

கல்யாணப் பெண்   ரூ 0-12

வி. நாராயணன் & கம்பெனி,

4, கொண்டி செட்டித் தெரு, சென்னை.

பாரத நாட்டின் நிலைமை.

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்றுப் பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சிறும் சிறப்புமற்று, பரிகாசத்துக் கிடமாய்விட்டது ஒரு புறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர், புசிக்க வகையின்றியும், கூலிக்கு வேலையின்றியும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச் சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜிய விஷயத்தில் உயர் நிலைமையெய்து முன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத் தொழிலை விருத்தி செய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்றுச் சுகவாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனையவேண்டு மென்பதே இந்நூலின் நோக்கமாகும்.   விலை ரூபா. 1—0—0

ஆரிய சரித்திரம். நீதிக் கதைகள்.

சுமார் 300-பக்கங்கள் உள்ளது; சித்திரப்படங்களும் அமையப்பெற்றது; நான்காம்பதிப்பு. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய்ப் பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூபா. 1—0—0

கணேஷ் கம்பெனி,

39, தம்புசெட்டித் தெரு, சென்னை.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழிபெயர்த்தமைத்தது.   விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10. படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது.   விலை ரூ. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம பதிப்பு.   விலை அணா 6.

கதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

வி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன,   விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிக்க வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரந்தோறும் படிக்கும் பக்த சிரோமணிகளுக்கு இந்நூல் மிகவும் உபயோகமானது.   விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்

கிருஷ்ணஸ்வாமி சர்மா

அவர்களால் எழுதப்பட்டது.

	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மகிழ்ச்சி புண்டாக்ககூடியதாயுமுள்ளது. இன்பச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையில் எழுதியது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்துகொள்ளலாம்.   விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,

சென்னை.

"தமிழ் உலகு"

சென்னை மைலாப்பூரிலிருந்து ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன், எம்.ஏ. அவர்களால் வெளியிடப்பட்டு வரும் இவ்வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையைப்பற்றி நமது அபிப்பிராயத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். அவருடைய புத்தகங்களின் உரிமையை வகித்து வரும் மாக்மிலன் கம்பெனியாரும் இதற்கிணங்கி இருக்கின்றனர். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. மொழி பெயர்ப்பில் மகாகவியின் ஆழ்ந்த கருத்து பின்னப்படாமலிருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. பக்கங்களும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல விஷயங்களைப்பற்றிய வியாசங்கள் வெளியாகின்றன. தாய்பாஷையை அபிவிருத்திசெய்வதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகையை அன்னார் நடத்திவருவதால் தமிழ் நாட்டினர் இதனை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை நாம் கூறத்தேவையில்லை.

சுதேசமித்திரன், 16—8—1922

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)

ஞாயிற்றுகிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.		வெளி நாடு.	
½-வருஷம்	3 0 0	½-வருஷம்	3 8 0
1-வருஷம்	5 0 0	1-வருஷம்	6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில்மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

விளம்பர விகிதம் :— சென்னை மைலாப்பூர், 16, பசுபதி அக்கிரஹாரம் "தமிழ் உலகு" மானேஜருக்கு எழுதி யறிந்துகொள்ளவும்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனும்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

சுதேசியமானது ! உபயோகமுள்ளது ! !

அமிர்தாஞ்சனம்
எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.